## சிகரெட் வரிக்கான விலைக்குறியீடு; அதை "சரியாகச் செய்தல்" மற்றும் "பிழையாகச் செய்தல்"

இலங்கையின் சிகரெட் வரிவிதிப்பில் அதிக தொழில்முறை முகாமைத்துவம் தேவைப்படுகிறது. இது ஆச்சரியமானவொரு விடயமல்ல - அரசாங்கத்தின் பெரும்பாலான தொழிற்பாடுகளுக்கு தொழில்முறை முகாமைத்துவம் தேவையாகவே உள்ளது. சிகரெட் வரிகள் குறித்து விசேட கவனம் செலுத்தி அதை குறிவைப்பது மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது இப்போது ரூ. 100 பில்லியனுக்கும் மேலான தொகையை அரசாங்கத்திற்கு ஆண்டு வருமானமாக ஈட்டுகின்றது.

சிகரெட் வரி விதிப்பின் பெரும் பாகமானது, அரச வருமானம் மற்றும் அழிக்கப்படுகின்ற பொது நலன்கள் தொடர்பானதாக மட்டும் காணப்படவில்லை. இலாபமானது பெரும் அளவில் தனியார் துறையினர் மீது குவிந்துள்ளதால், இது தனியார் துறையினரின் நலன்களிலும் எதிர்மறையாக பெரும் பங்காற்றுகின்றது. ஏனென்றால், இலங்கையில் சிகரெட் உற்பத்தியில் ஏகபோக நிலைமையே காணப்படுகின்றது.

சிகரெட் வரிகளின் வரலாற்றைப் பார்த்தால், ஒவ்வொருவரினதும் நலன்களுக்கிடையிலான இழுபறி பெரும்பாலும் அரசாங்கத்தின் செயல்கள் மற்றும் கொள்கைகள் "சரியாக செய்தல்" மற்றும் "பிழையாக செய்தலுக்கிடையில்" ஊசலாடுவதை எடுத்துக்காட்டுகின்றது. அல்லது இன்னும் அடையாளப்பூர்வமாக கூறுவதாயின், சிகரெட் வரிகளை “சரியாக செய்ய" எடுக்கும் முயற்சியானது, ஒரு மனிதன் குதிரையில் ஏறுவதற்காக ஒரு பக்கத்தில் இருந்து மிகவும் இடர்பட்டு தவழ்ந்தேறுவது, மறு பக்கத்தில் இருந்து விழுவதற்காக மட்டுமே, போன்றதானதாக காணப்படுகின்றது. அரசாங்கத்தின் சமீபத்திய வரவுசெலவுத் திட்டத்திலும் அதற்கு பின்னரான விளைவுகளிலும் இப்போக்கு எவ்வாறு மீண்டும் இடம் பெறுகின்றது என்பதை தற்போதைய இவ்வாய்வு குறிப்பிடுகிறது.

## வரவு செலவுத் திட்டம் 2019 க்கான ஆயத்தம்: அதை "சரியாகச் செய்தல்" மற்றும் "பிழையாகச் செய்தல்"

கடந்த இரண்டு தசாப்தங்களாக சிகரெட் வரிவிதிப்பு கொள்கை அமைக்கப்பட்ட விதத்தில் இரண்டு முக்கியமான குறைபாடுகள் உள்ளன. முதலாவதாக, சிகரெட் வரி அதிகரித்த விதத்தில் சீரில்லாத தன்மை இருந்தது - வரி அதிகரிப்பட்ட தடவைகள் மற்றும் அதிகரிக்கப்பட்ட அளவைப் பார்க்கும் போது அவை எழுந்தமானமாக முடிவுகள் எடுக்கப்படும் நடைமுறையைக் காட்டியது. உதாரணமாக, 2004 முதல், இரண்டாவது மிக உயர்ந்த சந்தைப் பங்கைக் கொண்ட சிகரெட்டின் மீதான வரி 10 தடவைகள் மட்டுமே அதிகரிப்புக்கு உட்படுத்தப்பட்ட அதே வேளை, அதிக சந்தைப் பங்கைக் கொண்ட சிகரெட்டின் மீதான வரி 22 தடவைகள் அதிகரிப்புக்கு உட்படுத்தப்பட்டது. முன்னர் குறிப்பிட்ட சிகரெட்டின் வரி, சில நேரங்களில் 24 மாதங்களுக்கும் மேலாக அதிகரிக்கப்படவில்லை, அத்துடன் சில சமயங்களில் 6 மாதங்களுக்குப் பிறகு அதிகரிக்கப்பட்டது. பின்னர் குறிப்பிட்ட சிகரெட்டின் வரி, சில நேரங்களில் 3 மாதங்களுக்குள் அதிகரிக்கப்பட்ட அதே வேளை சில நேரங்களில் 18 மாதங்களுக்கும் மேலாக அதிகரிக்கப்படவில்லை. (இந்த

கட்டுரையில் இடம்பெற்ற சந்தை பங்குக்கான அனைத்து மதிப்பீடுகளும், 2015 மற்றும் 2016 தரவுகளிலிருந்து பெறப்பட்டவை).

இரண்டாவதாக, வரி அதிகரிப்பட்ட அளவீட்டு முறையானது சிகரெட்டுகளை மிகவும் மலிவு பெறச் செய்து, சிகரெட் விலையில் ஈட்டப்படும் அரசாங்கத்தின் பங்கைக் குறைத்தது.இது முன்மொழியப்பட்ட கொள்கையினால் அடைய எதிர்பார்த்ததற்கு எதிர்மாறானதாக அமைந்தது. உரு 1, 1980ம் ஆண்டு முதல் சிகரெட்டின் இலகு கொள்வனவுத் தன்மையில் காணப்பட்ட ஏற்ற இறக்கங்களைக் காட்டுகிறது. மேலும் 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு இவ் இலகு கொள்வனவுத் தன்மையில் காணப்படும் ஏற்ற இறக்கங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன.

**உரு 1: JPGL சிகரெட்டின் இலகு கொள்வனவுத் தன்மை, 1980 – 2018**




*மூலம்: வரலாற்று விலைத் தரவுகளின் அடிப்படையில் ஆசிரியரால் கணக்கீடுகள் செய்யப்பட்டன.*

## வரவு செலவுத் திட்டம் 2019 உம் அதன் பின்விளைவுகளும்: அதைச் "சரியாகச்" செய்தல்

2019ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், “அதைச் சரியாகச் செய்யும் பொருட்டு” அரசாங்கம் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையை எடுத்தது. அதாவது இன்றிலிருந்து, சிகரெட் வரிகளை தீர்மானிப்பதற்கு ஒரு விலைக்குறியீட்டு முறை பின்பற்றப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது. இதன் பிரகாரம், வரி அதிகரிப்பானது பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாக கொண்டு விலைக் குறியிடப்படும். வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டவாறு நிதி அமைச்சரின் சொந்த வார்த்தைகளில் இதை கூறுவதாயின்:

> “இப்பொழுது சிகரெட்டுகளுக்கான மது வரி, ஒவ்வொரு வருடமும் ஆகக்குறைந்த வருடாந்த தீர்வையதிகரிப்பிற்குள்ளாகும் வண்ணம், வருடாந்த பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதான விலைக் குறியீட்டின் அடிப்படையில் இருக்கும். இது வருமான ஈட்டுகையை பாதுகாப்பதோடு, இலகு கொள்வனவுத் தன்மை, கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை உறுதி செய்யும்.”

*சிகரெட் வரிக்கான விலைக்குறியீடு: ஒரு கொள்கை, இரண்டு திருத்தங்கள்*

2019 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட இக் கொள்கை நிலைப்பாடு இரண்டு வழிகளில் “சரியாகச் செய்வதை ” நோக்கமாகக் கொண்டிருந்தது.

முதலாவதாக, சிகரெட்டுகளின் வரலாற்று ஒழுங்கின்மையான, குறிப்பாக 2000 ஆம் ஆண்டிலிருந்து, சிகரெட்டுக்களின் இலகு கொள்வனவுத் தன்மை குறைவடைவதற்கு பதிலாக அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கை சரிசெய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. (உரு 1 ஐ பார்க்கவும்).

இரண்டாவதாக, சிகரெட் வரி அதிகரிக்கப்பட்ட அளவு, அதிகரிப்பில் காணப்பட்ட எழுந்தமானமாக முடிவுகள் எடுக்கும் தன்மை மற்றும் வரி அதிகரிக்கப்பட்ட தடவைகளில் காணப்பட்ட சீரில்லாத்தன்மை போன்றவற்றை சரிசெய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆண்டுதோறும் நிர்வகிக்கப்படும் ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட, ஒரு விலைக்குறியீட்டு முறையானது இவ்விரு பறவைகளையும் ஒரே கல்லால் கொல்லும் முறைக்கு ஒப்பான ஒரு பொருத்தமான வழியாகும்.

**வரவு செலவுத் திட்டம் 2019 உம் அதன் பின்விளைவுகளும்: அதைப் "பிழையாகச்" செய்தல்**

வரவுசெலவுத் திட்ட சமர்ப்பிப்புகளின் போது வாசிக்கப்படும் கொள்கை அறிவிப்புகள் அவைகளாகவே போதுமானதாக இல்லை என்பது இப்போது இலங்கையில் நன்கு புரிந்து கொள்ளப்பட்ட ஒரு விடயமாக உள்ளது. அறிவிக்கப்படும் கொள்கைகள் தங்களைத் தாமாகவே சென்று செயல் படுத்தப்போவதில்லை. எனவே, வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்படும் கொள்கைகள் இறுதியில் அவை செயல்படுத்தப்பட்டால் மட்டுமே சிறப்பானவை (ஒரு வரையறுக்கப்பட்ட மற்றும் ஆரம்ப கட்டத்தில் உள்ள வரவு செலவுத் திட்ட செயல்படுத்தல் கண்காணிப்பானை இங்கு காணலாம்: www.budgetpromises.org).


நன்கு வடிவமைக்கப்பட்டு அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இவ் விலைக் குறியீட்டு முறையானது, உடனடியாகவே அரசாங்கத்தின் வழமையான பிரச்சினையான செயல்படுத்தல் சிக்கலில் சிக்கியது. இச்செயல் படுத்தல் சிக்கலே அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படும் பெரும்பாலான திட்டங்களை முன்னேறவிடாது தடுப்பதாகும். அரசாங்கம் தனது விலைக்குறியீட்டு கொள்கையை இரண்டு வழிகளில் தவறாக நடைமுறைப்படுத்திவிட்டதாக தெரிகின்றது.

முதலாவதாக, விலைக்குறியீட்டின் அடிப்படையிலான வரி அதிகரிப்பு பயன்பாடு பகுதியளவே செயல்படுத்தப்பட்டமை. சிகரெட் வரிவிதிப்பு மேற்கொள்ளும் போது, சிகரெட்டின் நீளத்தின் அடிப்படையில் அவை ஐந்து குழுமங்களில் பிரிக்கப்படுகின்றன. இருப்பினும், சிகரெட் வரிகளை 12% ஆல் அதிகரிக்கும் கொள்கையை வார்த்தமானியூடு அறிவிக்கும் போது, அரசாங்கமானது மிகக் குறைந்த நீளமுள்ள சிகரெட்டிற்கான வரி அதிகரிப்பை வர்த்தமானியிடத் தவறிவிட்டது. இது மிகக் குறைந்த விலையை கொண்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் இரண்டாவது மிக உயர்ந்த சந்தைப் பங்கையும் கொண்டிருந்தது. இது நுகர்வோரை குறைந்த விலை சிகரெட்டை (மற்றும் மிகக் குறைந்த வரி விதிக்கப்பட்டுள்ள) தேர்வு செய்யச் செய்து

அரசாங்க வருமானத்தை குறைக்கும் அபாயத்தை கொண்டுள்ளது.

இரண்டாவதாக, வரி அதிகரிப்பட்ட குழுமங்களுக்கு(சிகரெட் நீளத்தின் அடிப்படையிலான), அதிகரிக்கப்பட்ட மொத்த மது வரியானது நீள வேறுபாட்டின் அடிப்படையில் முறையாக அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எளிமையாகச் சொன்னால், குறியீட்டு முறை முறையாகப் பயன்படுத்தப்படிருந்தால், அதிகம் நுகரப்படும் சிகரெட்டுடன் ஒப்பிடும்போது, பாதி நீளமுள்ள மற்றொரு சிகரெட்டுக்கான மது வரி, முதல் கூறப்பட்டதன் அரைவாசியிலும் குறைவாக இருந்திருக்காது. தற்போது அனைத்து நீள சிகரெட்டுகளினதும் மது வரி, அதிகமாக நுகரப்படும் நீளத்தையுடைய சிகரெட்டுக்கான வரியுடன் ஒப்பிடுகையில், நியாயப்படுத்தக்கூடியதை விட குறைவாக உள்ளது. இக் குறைபாட்டை இல்லாதொழிப்பதற்கு, இந்த நீளச் சிகரெட்டு குழுமங்களின் வரிகளை அதிகரிக்க வேண்டிய சதவீதங்கள் மற்றும் கணக்கீடுகளை, உரு 2 காட்டுகின்றது. ஆகக்குறைந்த வரி விதிப்பானது, நீளத்தின் அடிப்படையில் விதிக்கப்பட வேண்டிய வரியை விடக் குறையாதிருப்பதற்கு, வரி குறைவாக காணப்படும் நீள குழும சிகரெட்டுக்கு விதிக்கப்படவேண்டிய வரி அதிகரிப்புத் தேவையானது 40 முதல் 130 சதவிகிதம் வரையாகக் காணப்படுகின்றது.

**உரு 2: மே 2019 அன்று, சிகரெட் நீளம் மற்றும் மது வரி ஒப்பீடு**




*மூலம்: வர்த்தமானி அறிவிப்புக்கள் (பல்வேறு வருடங்கள்)*

விலைக்குறியீட்டைப் பயன்படுத்துவதில் உள்ள இக்குறைபாடு அரசாங்க வருமானத்தை இரு வழிகளில் பாதிக்கின்றது: ஒன்று, இது குறைந்த நீள சிகரெட்டுகளைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து குறைந்த வரி வருமானத்தைப் பெற வழிவகுக்கிறது, மற்றும் இரண்டாவது கூடிய நீள சிகரெட் பாவனையாளர்களை குறைந்த நீள சிகரெட் பாவனைக்கு மாற இது ஊக்குவிப்பதால், அரசாங்க வருமானமானது மேலும் குறையக்கூடிய அபாயத்தை கொண்டிருக்கச் செய்கின்றது. இதற்கான காரணம் யாதெனில்,

சார்பு வரி மிகக் குறைவாக இருக்கும்போது, சார்பு விலையும் மிகக் குறைவாக இருந்து குறைந்த விலை உள்ளதற்கு மாறுவதை ஊக்குவிப்பதால் ஆகும்.

**மிகப்பெரிய வருமான அபாயம்: குறைந்த வரி விதிக்கப்பட்டுள்ள சிகரெட்டுகளுக்கு நுகர்வோர் மாறுதல்**

மக்கள் பீடி நுகர்வுக்கு மாறுவதை தடுப்பதன் மூலம், குறைந்த வரி /விலை சிகரெட்டுக்கள் அரச வருமானத்திற்கு உதவுகின்றன போன்ற ஆய்வு செய்யப்படாத வாதீடுகள் காணப்படுகின்றன. இக் கூற்று மோசமான சிந்தனையின் வெளிப்பாடு என்பதை ஆராய்சி முடிவு காட்டுகின்றது.

2016 ஆம் ஆண்டில் அதிக சந்தைப் பங்கைக் கொண்ட சிகரெட் வர்த்தக அடையாளத்திற்கும்(72-84 மிமீ நீள குழு), இரண்டாவது மிக உயர்ந்த சந்தைப் பங்கைக் கொண்ட சிகரெட் வர்த்தக அடையாளத்திற்கும்(60 மிமீ க்கும் குறைவான நீள குழு) இடையேயான வரி இடைவெளி ரூ. 30 க்கும் அதிகம். குறைந்த நீளமுள்ள சிகரெட் குழுமத்தின் முக்கிய வர்த்தக அடையாளமே சந்தையில் மலிவாக கிடைக்கும் சிகரெட் வர்த்தக அடையாளமாகும். மிக உயர்ந்த சந்தை பங்குள்ள சிகரெட் வர்த்தக அடையாளத்திலிருந்து குறைந்த நீள சிகரெட் வர்த்தக அடையாளத்திற்கு நுகர்வோர் மாறும் போது, அரசாங்கமானது ஒவ்வொரு சிகரெட்டிற்குமான வரிப் பணத்தில் ரூபாய் 30ஐ குறைவாகப் பெறுகின்றது. மேலும், விலை வேறுபாடு ரூபாய் 45 ஆகக் காணப்படுவதால், அவ்வாறு செய்வதற்கான ஆர்வம் அதிகமாக உள்ளது. மேலும் சிகரெட்டுக்களுக்கிடையில் மாறுவதற்கான வாய்ப்பும் அதிகமாக உள்ளது, காரணம் அண்ணளவாக 80 சதவீதமான சிகரெட் நுகர்வு (சந்தைப் பங்கு) 72–84 மிமீ நீளமுள்ள சிகரெட் குழுமத்திலேயே அதிகமாக உள்ளது.

இதற்கு மாறாக, இந்த மிகக் குறைந்த நீள வர்த்தக அடையாள சிகரெட்டிற்கும் பீடிக்கும் இடையிலான விலை வேறுபாடு ரூபாய் 15 (அண்ணளவாக) ஆகும். அக் குழுமத்தில் ஒரு சிகரெட் குச்சியின் தற்போதைய வரி வருமானம் ரூபாய் 14 (அண்ணளவாக) ஆகும். எனவே, ஒரு நுகர்வோர் அதிகம் விற்பனையாகும் சிகரெட் வர்த்தக அடையாளத்திலிருந்து மலிவான வர்த்தக அடையாளத்திற்கு மாறும்போது அரசாங்கத்திற்கு ஏற்படும் வருமான இழப்பானது, அவர் மலிவான வர்த்தக அடையாள சிகரெட்டிலிருந்து பீடிக்கு மாறும் இழப்பைக்காட்டிலும் இரு மடங்கு அதிகமாகும். எனவே, இங்கு ஆய்வு செய்யப்பட்டதை விட அதிகமான காரணங்களுக்காக, குறைந்த வரி விதிக்கப்படும் சிகரெட் வர்த்தக அடையாளங்களை நோக்கி நுகர்வோர் செல்லும் தன்மை ஊக்குவிக்கப்படுவதாலேயே அரசாங்க வருமானமானது மிகப்பெரிய அபாயத்திலுள்ளது. விலைக்குறியீட்டு கொள்கையின் மோசமான செயல் படுத்துகை இவ் ஆபத்தை இப்போது அதிகரித்துள்ளது.

இலங்கை ஒரு அங்கத்துவராக இருக்கும் WHO மற்றும் புகையிலை கட்டுப்பாடு தொடர்பான கட்டமைப்புப் பேரவை (FCTC) ஆகியன பரிந்துரைக்கும் கொள்கை வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இவ் அபாயத்தைத் தணிப்பதற்கான வலுவான நடவடிக்கைகளை எடுக்க முடியும். இப் பரிந்துரைகளில், குறைந்த வரிக் குழும சிகரெட்டுகள் மீதான வரி அதிகரிப்புகளை விரைவுபடுத்தல், அதிக வரிச் சிகரெட் குழுமங்களுடன் ஒன்றிணைத்தல்; மற்றும் குறைந்த நீள குழும சிகரெட்டின் குறைவான

வரிவிதிப்பை படிப்படியாக குறைத்து அகற்றுதல் போன்ற நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ள. இது அரசாங்கமானது, நுகர்வோர் குறைந்த வரி விதிக்கப்பட்டுள்ள சிகரெட் வர்த்தக அடையாளங்களுக்கு மாறுவதை ஊக்கப்படுத்தி வரி வருமானத்தை குறையச் செய்யும் சந்தை உத்திகளை கட்டுப்படுத்தச் செய்கின்றது.

இந்த ஆய்வின் முக்கிய அம்சம் என்னவென்றால், 2019 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், சிகரெட் வரிகளை அமுலாக்குவதற்கும் அதிகரிப்பதற்கும் விலைக்குறியீட்டு முறையை அறிமுகப்படுத்தி, அரசு சரியான காரியத்தை செய்தது. இது சிகரெட் வரியின் வரலாற்றில் அடையாளம் காணப்பட்ட இரண்டு பரவலான சிக்கல்களை சரிசெய்வதில் நீண்ட தூரம் செல்லக்கூடும்: (அ) வரி அதிகரிப்பில் தொடர்ச்சி மற்றும் சீரான தன்மை இல்லாமை, மற்றும் (ஆ) சிகரெட்டின் இலகு கொள்வனவுத் தன்மையை நீண்ட காலமாக கட்டுப்படுத்தவும் குறைக்கவும் தவறியமை. கொள்கைகளில் குறிப்பிடத்தக்க புதுமையானதான இவ்விலை குறியீட்டுக் கொள்கை, இந்த சிக்கல்களுக்கு விடையாக அமைந்தது.

இருப்பினும், இம்முறை, கொள்கையை சரியாகச் செய்திருந்தாலும், செயல்படுத்தலை அரசாங்கம் தவறாகச் செய்து விட்டதாகத் தெரிகிறது. ஒன்று, மிகக் குறைந்த விலை / வரி விதிக்கப்பட்ட சிகரெட்டுக்கு, குறிப்பிடப்பட்ட விலைக்குறியீட்டை வர்த்தமானி மூலம் அறிவிக்கத் தவறியமை; மற்றும் இரண்டாவது, குறைந்த வரி விதிக்கப்படும் சிகரெட்டை நோக்கி நுகர்வோர் செல்லும் தன்மைக்கான அபாயம் அதிகரிக்காதவாறு, குறைந்த சந்தை பங்கைக் கொண்ட சிகரெட்டுகளின் வரிகளை கணிப்பீடு செய்யத் தவறியமை.

வெறிடே ரிசேர்ச் பொருளியல், சட்டம், அரசியல் மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் உயர் மட்ட தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு மூலோபாய பகுப்பாய்வுகளை வழங்கும் கொழும்பைத் தளமாகக்கொண்ட சுயாதீனமான ஒரு சிந்தனைக் குழாமாகும். உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மின்னஞ்சல்: publications@veriteresearch.org